தண்ணீர் அதிகமாக வந்து கொடை ரோட்டிலிருந்து பள்ளப்பட்டி வரையில் உள்ள பாதைகளில் உடைப்பு எடுத்து, இரயில் கவிழக்கூடிய நிலைமை இருக்கிறது; ஆயிரக்கணக்கானவர்கள் சாகக்கூடிய நிலைமை இருக்கிறது; செத்தும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைக்க 1987-88 ஆம் ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவு நுட்பத்தைப் பயன்படுத்தி, திறமையைப் பயன்படுத்தி, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த காலத்தில் பி.சி.ஏ.சி. ரேஷியோ மோசமாக இருந்ததால் மறு ஆய்வு செய்ய உத்திரவிடப்பட்டிருக்கிறது. மறு ஆய்வு செய்து சாதகமாக வரும்போது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேரவைக்கு (செனட்) மூன்று உறுப்பினர்களை இவ்வவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும்பொருட்டு வேட்புத் தாள்கள் கோரியபோது ஐந்து உறுப்பினர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருந்தார்கள். எனவே இன்று தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருந்தேன். தற்போது உறுப்பினர்கள் டாக்டர் ந. மாசிலாமணி மற்றும் திரு. சா. ஜெயச்சந்திரன் இருவரும் தாங்கள் இந்தப் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக என்னிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளபடியால் கீழ்க்கண்ட மூன்று உறுப்பினர்கள் மேற்படி

1987 மே 5] [பேரவைத் தலைவர்]

பேரவைக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

1. திரு. சு. சிவராஜ்

2. திரு. சா. ஞானசுந்தரம்

3. திரு. துரை அன்பரசன்

எனவே, தேர்தல் தேவையில்லை என்பதையும் அறிவிக்கிறேன்.

3. தகவல் கோரல்

வினாக்களுக்கு விடைகள் அனுப்புவதில் துறைகளில் ஏற்படும் தாமதம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இன்று கேள்வி நேரத்தில் என்னுடைய கேள்வியை நான் போட்டபோது, 5, 6 மாதங்களுக்கு முன்னால் போட்ட கேள்விக்கு அண்மையில் பதில் வந்தவுடனே பட்டியலில் போட்டு வந்துவிட்டது என்று சொன்னார்கள். இதற்கு முன்னாலே கூட கேள்வி போட்டபோதும் பதில் வருவதற்கு நீண்டநாள் ஆகிவிட்டது. சம்பந்தப்பட்ட துறையிலிருந்து இங்கே வந்தவுடன் தாமதம் இல்லாமல் பதில் தரப்படுகிறது. ஆனால் நீண்டநாட்களாகப் பதில் வராமல் இருக்கும்போது சம்பந்தப்பட்ட இலாகாவைக்கோரி, விரைவிலே பதில் பெறுவதற்கு என்ன நடவடிக்கை என்று ஒரு உறுப்பினர் கேட்டார்; நானும் கேட்கிறேன். நாங்கள் கேள்வியை அனுப்புகிறோம். 6 மாதம், ஒரு வருடம் கூட கழித்துப் பதில் வருகிறது என்றால் அரசுதான் அதற்கு பொறுப்பு. பதில் தருவதில் தாமதம் ஏற்படுகிறபோது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, உறுப்பினர்கள் போடுகின்ற கேள்விகளுக்கு உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பதிலைப் பெற்று, 41 நாட்களுக்குள்ளாகப் பதில் வாங்கித் தருவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே உடனடியாகப் பதில் தர அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். சில கேள்விகளின் தன்மையைப் பொறுத்து, நிறைய விவரங்களைப் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிற போது தவிர்க்க முடியாமல் சற்று, காலதாமதம் ஏற்படுகிறது. கேள்விகளைப் பொறுத்தவரையில் எதைப்பற்றிக் கேட்கிறார்கள், என்ன விவரத்தைக் கோருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் காலதாமதம் ஏற்படுகிறது.